A. நத்தக் காட்டுப்பட்டி வடக்கிவெளித் தரம்பிலை தெக்கே
மின்னு நிக்கிறெரே...

B. நிக்கிறெரே...

A. "இன்னுடையாக் கவண்டா!

B. அ.

A. இன்னுடையாக் கவண்டா!

B. அ.

A. இன்னுடையாக் கவண்டா!" என்று மூன்று தரம்

B. அ.

A. சொல்லியாங் கூப்பிட்டாரே....

B. கூப்பிட்டாரே...

A. 'சண்டாளை இன்னைக்கி வந்திருக்கிறென்னு'

B. அ.

A. இன்னுடையா சாமி திமிரென்று எழுந்திருச்சு
அடிவந்து,

B. அ.

A. கையை அப்படியெ தெங்கியிட்டார்...

B. தெங்கிவிட்டார்...

A. "இன்னுடையாக் கவண்டா, பொறு! பொறு! பொறு!"

B. அ.

A. "சண்டாளா! சதிகாரா! நீ, மெள்ள வட்டத்லெ ஒட்டிக் கிட்டிருக்கறென்னு சொன்னியே, இருந்தயா நிய்யி?

B. ஆ.

A. ராஜாவுக்கிட்டெ வயித்து வலின்னு சொல்லங்காட்டித்தே என்னுடைய உயிரு பொழச்சது.

B. ஆ.

A. "ஏனுங்க மாமா, உரிமைப் பொண்ணைக் கொத்துப் போட்டு வேலியெப் பாருங்க"ன்னு சொல்லிருந்தா,

B. ஆ.

A. என்னுடைய உயிரிருக்குமா?

B. ஆ.

A. என்னையெக் கொலை செய்த மாதிரி செய்துபோட்டயே?"

B. ஆ.

A. சாமியின் சொல்லுகிறெ...

B. சொல்லுகிறெ..

A. "அப்பா, நிய்யி மாமன்னு சொல்றதெ விட்டுப்போட்டு சாமி, வயித்தெ வலிக்கிறதுங்கின்னே.

B. ஆ.

A. ஏது, மாறிவிட்டின்னு நான்

B. ஆ.

A. தெய்வசபைக்கி புறப்பட்டேன்.

B. ஆ

A. இன்றைக்கி மேலை போரகல் கீழை வர்ரதுக்குள்ளாக

B. ஆ.

A. உனக்குத் திருமணம் செய்து,

B. ஆ.

A. பொன்னிவள நாட்டுக்கு

B. ஆ.

A. அனுப்பிச்சு வைக்கிறனே..."

B. வைக்கிறனே...

A. கொந்சொ வெண்ணீறை வீசியபட்டார்.

B. ஆ.

A. அப்பொ இன்னுடையக் வேண்டுக்கு சுவாய மடங்கி

B. ஆ.

A. "சாமி இன்னக்கி செய்து வைங்க. செய்து வைங்க"

அப்பிடீண்டுட்டு

B. ஆ.

A. அப்பமுமே நல்லதென்று அன்புடனே சொன்னார்கள்...

B. சொன்னார்கள்...

A. "செரி புறப்படு போகலாமின்னு

B. ஆ.

A. ராஜாவுட அரண்மனைக்கி அச்சினமா வருகிறார்கள்...

B. வருகிறார்கள்...

A. காவலர்களெல்லாரும்

B. ஆ.

A. அப்பிடியெ நிக்கிறெ.

B. ஆ.

A. பரந்தாமன் வெண்ணிறெ வீசவும்

B. ஆ.

A. மேனெ முக்கா நாழிகை

B. ஆ.

A. காவலர்கள் மூச்சொணர்ந்து போயிட்டாரே...

B. போயிட்டாரே...

A. அந்த சமையத்திலெ இன்னுடையா சாமியை

B. ஆ.

A. பெரி நடைக்கி கூட்டிட்டுப் போயி

B. ஆ.

A. தெக்கெ தலயெ வெச்சு வடக்கெ காலெ நீட்டி,

B. ஆ.

A. "இன்னைக்கி செரியா நீ கெட்டுப் போடவேணும்

B. செரி.

A. நா, அப்பியெ வெண்ணிறெ வீசிக்கிட்டிருக்கறெ"

பரந்தாமன்

B. ஆ.

A. இன்னுடையாக்ஸெண்டர் மாறி வெவொரெண்ணு,

B. ஆ.

A· மயிலிறகிலே

B· ஆ·

A· வெண்ணிற அப்பழயெ வீசிக் கொண்டு இருக்கிறே..

B· இருக்கிறே..

பாட்டு:-

↓

A· இந்த இந்த பிறகாரோ அங்கு பிறகாரோ

B· ஐயா பிறகாரோ இனி பிறகாரோ

A· அங்கே நடக்கிது பார் ராஜடெ
அரண்மனையில் அங்கு அரண்மனையில்

B· அடா இந்த நல்ல அங்கே
பிறகார இனி பிறகாரம்

A· ஏ பிறகாரோ அங்கு பிறகாரோ

B· அங்கே நடக்கிது பார் அங்கே
ராஜனுட நல்லரண்மனையில்

A· அந்த அப்பழயெ அப்பழயெ
நல்லதென்று அங்கு நல்லதென்று

B· அடா நல்லதென்று நல்ல நல்லதென்று

A· அங்கே அன்புடனே அன்புடனே
நடக்கிது பார் அங்கு நடக்கிது பார்

B· அடா அப்பழயெ அப்பழயெ
நல்லதென்று நல்ல நல்லதென்று

A. இனி நல்ல தென்று அங்கு நல்ல தென்று

B. அங்கே நடக்கிறுபார் அங்கை

அதிகாரரோ இனி அதிகாரரோ

A. அங்கே வெள்ளி வெள்ளி

உதிக்குமுன்னே அங்கு உதிக்குமுன்னே

B. ஏ அங்கே உதிக்குமுன்னே

நல்ல உதிக்குமுன்னே

A. அந்த வெண் கோழி வெண்கோழி

கூவுமுன்னே அங்கு கூவுமுன்னே

B. அடா வெள்ளி நல்ல அங்கே

உதிக்குமுன்னே நல்ல உதிக்குமுன்னே

A. அங்கை உதிக்குமுன்னே

அங்கு உதிக்குமுன்னே

B. அங்கே வெண்கோழி நல்ல

கூவுமுன்னே நல்ல கூவுமுன்னே

about 1 min. and 51 sec.

A. வெள்ளி உதிக்குமுன்னே வெண்கோழி கூவுமுன்னே...

B. கூவுமுன்னே...

A. ராஜா ரண்டு பேரும், மரிக் கொணர்ந்தாக் கவண்டரு

சிவக் கொணர்ந்தாக் கவண்டரும்.

B. ஆ.

A. கூட தெரிசனக்கி யானைமுகப்பன்ஐயார் கோவி
லுக்கு

B. ஆ.

A. வந்து நடையை,

B. ஆ.

A. சமரைன்று நீக்கியுட்டார்....

B. நீக்கி வுட்டார்...

A. "யாரடா, நீ?"

B. ஆ.

A. "ஏனுங்கமாமா உரிமைப்பொண்ணைக் கொத்துப்போட்டு
வேலையெப் பாருங்கப்பின்னு".

B. ஆ.

A. "அடா! அடா! அடா! சண்டாளா!

B. ஐயா

A. வேலிக்கிட்ட முள்ளு காலுக்கு நெரிப்புதே.

B. ஆ.

A. சண்டாளன், சதிகாரன், கொலைகாரன்.

B. ஆ.

A. ஏனுங்க மாப்பளை, உரிமைப் பொண்ணைக் கொத்துப்
~~[illegible]~~ போட்டு வேலையெப் பாருங்கென்று கேள்க்
கிறேன்.

B. ஆ.

A· ஒடியாங்க காவலர்கள்...

B· காவலரே...

A· இவனைக்கட்டி, உதைட்டி,

B· ஆ.

A· ஏதைங்க பார்க்கல" அப்பிடின்னுட்டார்.

B· ஆ.

A· ராஜாவு உத்திரவுப் பிறகாரம் காவலன் ஒடியாந்து,

B· ஆ.

A· கட்டி உதைட்டிப் போட்டு,

B· ஆ.

பாட்டு:-

↓ A· அஞ்சுமணி என்னுத்தா சாட்டையிலே

B· சாட்டையிலே

A· அஞ்சுமணி அடா அடா சாட்டையிலே

B· சாட்டையிலே

A· பஞ்சு பஞ்சா எஞ்சாமி பறக்கிது பார்

B· அஞ்சுமணி அண்ணண்ணு சாட்டையிலே

A· சாட்டையிலே

B· கெஞ்சக் கெஞ்ச சண்டாளை வீசுறனே

A· ஏ ஆறுமணி என்னுத்தா சாட்டையிலே

B· சாட்டையிலே

A· ஆறுமணி எஞ்சாமி சாட்டையிலே

B· சாட்டையிலே

A. தாயுமாரு சாமியை அழைக்கிறேரே

B. அடடா ஆறுமணி அன்னைக்கு சாட்டையாலே

A. சாட்டையாலே

B. சாட்டையாலே

A. ஆமட சாமி

B. அவ மின்னும் மின்னு எங்களய்யெ வீசுகிறானே

A. ஏ மொன்னவாயு என்னத்தா சாட்டையாலே

B. சாட்டையாலே

A. மொன்னை முறிச்சு சாமியை தீட்டுறேரே

B. மொன்னவாயு அன்னு இறடாவிலே

A. சாட்டையிலே

B. இறடாவிலே

A. சாட்டையாலே

B. இப்ப மொன்னை முறுக்கி எங்களய்யெ வீசுறானே

about 54 sec. ↑

A. சாமிக்கி ரத்தம் பெருகுது ரத்த வெள்ளஞ்சாயுது

உதிரம் பெருகுது தங்கை உதிர வெள்ளம்

B. சாயுதங்கே...

A. கைசோர்ந்து மெய்சோர்ந்து கனத்தமுழு சோர்ந்தார்...

B. முழு சோர்ந்தார்...

A. சாமிக்கி காலாழுக்கையாழ கண்ணுயிரு போகுதங்கே...

B. போகுதங்கே...

A. சண்டாளன், சதிகாரன், இலெகாரன்.

B. ஆ.

A. பிச்சைக்கி வந்தவன் பொண்ணுக்கு மாப்பிளையாயிப்-

டான்.

B. ஆ.

A. நேத்துத் தினம் வந்து

B. ஆ.

A. யாரடான்னு கேட்டதுக்கு "சாமி வயித்தெ வலிக்கி"துன்னு

சொன்னான்.

B. ஆ.

A. நாம மெய்தானென்னு

B. ஆ.

A. அவனுக்கு எல்லாச் செகரமுஞ் செய்து வைச்சு,

B. ஆ.

A. இன்னைக்கி வந்து கேக்கும் போது

B. ஆ.

A. "ஏனுங்க மாப்பளெ, உரிமைப் பொண்ணைக் கெடுத்துப்

போட்டு வேடிக்கை பாருங்கன்னு கேக்கறனே

B. ஆ.

A. இவன் அத்தை மகனு?

B. ஆ.

A. மாமன் மகளு?

B. ஆ.

A. அதாவது, வயிற்றுச் சோத்துக்கு முப்பது வருஷம்.

B. ஆ.

A. எங்கயோ திரிஞ்சவனைக் கொண்டாந்து நம்ம
வீட்டுலெ வெய்க்கோ,

B. ஆ.

A. நம்ம கொலத்துக்கு ஈனம் வந்திட்டுதின்னு

B. ஆ.

A. ராஜாவு அப்பழயெ சொல்லுகிறார்...

B. சொல்லுகிறார்...

A. அடே, சேவகா!

B. ஆ.

A. சண்டாளனைக் கொண்டுபோய்

B. ஆ.

A. மார்விலங்கு,

B. ஆ.

A. மணிவிலங்கு,

B. ஆ.

A. கைவிலங்கு,

B. ஆ.

A. கால்விலங்கு,

B. ஆ.

A· தோள்விலங்கு,

B· ஆ.

A· துடைவிலங்கு பனிரண்டுவிலங்கையும் பூட்டி

B· ஆ.

A· யானைமுகப் பிள்ளையார் கோயிலில் கொண்டுபோய்,

B· ஆ.

A· ஆனை சுமக்காத அளவு கல்லை வெச்சு

B· ஆ. "

A· மேலை அமுத்துங்கடா....

B· அமுத்துங்கடா...

A· அப்படியே நல்லதென்று அப்படனே சொன்னார்கள்...

B· சொன்னார்கள்...

A· எந்சாமியைக் கொண்டுபோய

B· ஆ·

A· யானைமுகப் பிள்ளையார் கோயில்லை வைத்து,

B· ஆ.

A· யானை சுமக்காத அளவு கல்லைக் கொண்டாந்து

B· ஆ.

A· காவலர்கள் நெஞ்சின் பேரில் வைத்திட்டார்கள்...

B· வைத்திட்டார்கள்...

A· சாமிக்கி

B· ஆ.

A· தன்னுடைய ஞாபகம் இல்லாமல்

B· ஆ.

A. அப்பிடியிருக்கிறரே...

B. இருக்கிறரே...

A. அப்போ

B. ஆ.

A. பரந்தாமன், பூபாலகன், பண்டரிபதிநாதன்.

B. ஆ.

A. அடடா, நாம இரேந்த வரத்தை கொறவு வந்து நேர்ந்திட்டுதே. தந்த வரத்தை தவக்கிறை நேர்ந்திட்டுதே!

B. ஆ.

A. சண்டாளன்! சதிகாரன்! இரைகாரன்!

B. ஆ.

A. இன்னுடையாக் கவண்டனை அடிச்சு,

B. ஆ.

A. அதாவது யானை முகப் பிள்ளையார் கோயிலில்

B. ஆ.

A. ஆனை சுமக்காத அளவுகல்லை வெச்சு அமுத்தியிருக்கிறன்.

B. ஆ.

A. மேலை போரகல் கீழை வர்ரதுக்குள்ளாக

B. ஆ.

A. அவனுக்கப்போய் நாம மணம் செய்து,

B. ஆ.

A. பொன்னிவள நாட்டுக்கு

B. ஆ.

A. அனுப்ப வேணுமென்று

B. ஆ.

A. கெடுட வாகனத்தை வரவழைத்து,

B. ஆ.

A. மையமா பறக்கிறரே...

B. பறக்கிறரே...

A. வாளவந்தி நாட்டில் வடக்குத்தலை வாசலிலே,

B. ஆ.

A. என்னவழைவெடுத்தார் ஏகாந்த பேழகே...

B. பேழகே...

பாட்டு:-

A. ஐ நம்போ நரச்சது போல்

நம்போ நரச்சது போல்

B. நரச்சது போல்

A. நாளும் பூத்தது போல்

B. பூத்தது போல்

A. ஐ கொஞ்சம் நரச்சது போல்

B. ந நரச்சது போல்

A. ஐ கோரையாம் பூத்தது போல்

B. - போல்

A. கோரையம் ~~[illegible]~~

B. கோரையாம் பூத்தது போல்

A. ஐ தும்போ நரச்சது போல்

B. நரச்சது போல்

A. ஓ தாது விளாம்பூத்தது போல்

B. பூத்தது போல்

A. ஓ வாயிலே

B. பல்லுமில்லே

A. ஓ வயித்திலே

B. குடலுமில்லே

A. கண்ணு ரெண்டுங் கீரை

B. கீரைவிதே

A. ஓ காது ரெண்டுங்

B. கேளாமெ

A. ஓ செல்லரிச்ச பஞ்சா.

B. பஞ்சாங்க

A. ஓ சாமியாங் கைலெடுத்தார்

B. கைலெடுத்தார்

ஸ்லைட் 29 sec.

A. 'சம்போ, சங்கரா! மகாதேவா! லொடக்! அப்பிடீன்னுட்டு

B. அ.

A. நாணல் தடுத்தா நாப்பதடம் வழுவுவார்.

B. அ.

A. அருகம்பில் தடுத்தா ஐம்பதடம் வழுவுவார்.

B. அ.

A. தள்ளாடி, தத்தளித்து

B. ஆ.

A. சாமி வருகிறாரே...

B. வருகிறாரே...

A. யானைமுகப்பிள்ளையார் கோயில் வந்து,

B. ஆ.

A. மேடையின் மேலேறி,

B. ஆ.

A. பாம்பின் பேரில் ஆசனம் கொண்டு,

B. ஆ.

A. ஆசனம் போட்டு அமர்ந்தார் பருங்கொடுவா...

B. பருங்கொடுவா...

A. ஆனால், இன்னுடையாக் கவண்டருக்கு சாமிவந்தது தெரியாது.

B. ஆ.

A. மேலை உக்காந்து

B. ஆ.

A. பரந்தாமன்,

B. ஆ

A. என்னதான் கேள்க்கிறாரே...

B. கேள்க்கிறாரே...

A. "இன்னுடையாக் கவண்டா!

B. ஆ.

A· அது சாஸ்திரி எழுந்துட்டதோ?"

B· ஆ.

A· "சண்டாளா, ஜட்டைவாத்தாசா வந்துப்டியா மனுக் காவடி?

B· ஆ.

A· கல்லைவெச்சு அமுத்தீக்கணுங்க, இல்லாட்டி இந்நேர உண்ணயெ

B· ஆ.

A· அப்பிறயெ பஸ்பம் பண்ணிப் போடுவை, ஒரே கடயா கடைச்சி."

B· ஆ.

A· சாமிக்கு மட்டுல்லாக் கோபம் மனதிலடங்காமல் சொல்லுகிறர் மசைச்சாமி...

B· மசைச்சாமி....

A· "அப்பா, பொறு!

B· ஆ.

A· வரும் வினைவந்தால் வழியிலுந்தங்காது.

B· ஆ.

A· எந்தெந்தக் காலத்தில் எந்தெந்தக் கஷ்டத்தை அடைய வேண்டுமோ,

B· ஆமா

A· அதெல்லா பட்டேத்தான் தீரவேண்டும்.

B. ஆ.

A. ஆளுள் பொறு! "அப்படீன்னுட்டு

B. ஆ.

A. பரந்தாமன் மெற்கை திரும்பி பார்க்கறபோது,

B. ஆ.

A. அப்பிடீன்னு பார்த்தாரு.

B. ஆ.

A. வெண்ணிறை வீசீட்டார்.

B. சரி.

பாட்டு:-

(வானமும்)
A. மானமும் பூமியும் கொழுந்துட்டெரியுதே
மாமனரண்மனை இதுதானே

B. மானமும் (வானமும்) பூமியும் கொழுந்துட்டு முழுங்குதே
மாமனரண்மனை இதுதானே

A. மானமும் பூமியும் கொழுந்துட்டெரியுதே
மாமனரண்மனை இதுதானே

B. மானமும் பூமியங் கொழுந்துட்டு முழுங்குதே
மாமனரண்மனை இதுதானே

A. தன் தீயும் கொண்டுமெல்ல தானே எரியுதே
மாமனரண்மனை அதுதானே

about 52 sec.

B. நன் நீயும் தானு யெரியாதே
மாமனரண்மனே இதுதானு

A. மாயவருடே கிளேபயாலே

B. ஆ.

A. மாமனரண்மனே

B. ஆ.

A. வேகுது அந்நெரேரா...

B. அந்நேரம்...

A. "அடே செவுகரே, நடயாங்கடா! ஓடயாங்கடா!

B. ஆ.

A. மரக்கொணுந்தாக் கவண்று, சிவக்கொணுந்தாக்
கவுண்டர் கிரண்டுபேரும்

B. ஆ.

A. பறக்கிறென்னெரேரா...

B. அந்நேரம்...

A. "சண்டாளன்! சதிகாரரே! யாருடைய சாபமோ?

B. ஆ.

A. யாருடைய பாவமோ?

B. ஆ.

A· நம்மரமனையெரியுது.

B· ஆ.

A· வெட்டிலை புழக்கிது,

B· ஆ.

A· சீஷலை புழக்கிது.

B· ஆ.

A· தூக்கிலை புழக்கிது.

B· ஆ.

A· அப்பிழுயே எரியிதங்கை...

B· எரியிதங்கை...

A· அடே, சௌகா! என்ன காரணம்?

B· ஆ.

A· இதப் பாருங்க! இன்னுடையாக் கவண்டரு சாபமோ என்னமோ தெரீலயே?

B· ஆ.

A· கின்ன உயிரோடிருக்கறனு? உயிர் விட்டுட்டானு?

" இதப் பாருங்க!

B· ஆ.

A· என்று சொல்லும்போது ரண்டு பேரொடியாந்து பார்க்கும்-

போது

B· ஆ.

A· பரந்தாமன்,

B· ஆ.

A· வழவை மாற்றி,